திரு. என். எஸ். வி. சித்தன் : தலைவர் அவர்களே, முதலமைச்சர் அவர்கள் கூறிய பதிலில் 10 ஆண்டுகளுக்கு மேல் சென்னையில் துணை ஆணையர் இல்லை என்று சொன்னார்கள். பொதுவாகக் காவல் துறையில் 3 ஆண்டுகளுக்கு மேல் ஒருவர் ஒரு இடத்தில் இல்லாமல் இருக்கும் முறை இருந்தது. அந்த முறையைத் தொடர்ந்து பின்பற்ற ஆவன செய்யும் உத்தேசம் இருக்கிறதா?

மாண்புமிகு திரு. சி. என். அண்ணாதுரை : மூன்று ஆண்டுகளுக்கு மேல் இருக்கக் கூடாது என்ற விதி இல்லை. பொதுவாக மூன்று ஆண்டு களுக்கு மேல் அவர்களை வேறு இடங்களுக்கு அனுப்புவது பழக்கத்தில் இருந்துகொண்டு வருகிறது. சில தேவைகளை உத்தேசித்து சில அதிகாரிகள் மூன்று ஆண்டுகளுக்கு மேலும் இருந்துகொண்டு வருகிறார்கள்.

* 12. *Q*.—THIRU G. GOMATHISANKARA DIKSHIDAR : Will the Hon. the Chief Minister be pleased to state the number of Police Officers of this State deputed to serve the border Police as on 31st August 1967 categorywise ?

மாண்புமிகு திரு. சி. என். அண்ணாதுரை : இவ்வினாவுக்கு விடை அளிப்பது பொது நலனுக்கு ஏற்றதல்ல என்று அரசாங்கம் வருத்தத்துடன் தெரிவித்துக்கொள்ளுகிறது.

State Transport

* 212 *Q*.—THIRU K. VINAYAKAM : Will the Hon. the Minister for Public Works be pleased to state whether it is proposed to constitute a Committee of private bus operators to advise the Government on the working of the State Transport system ?

மாண்புமிகு திரு. மு. கருணாநிதி : இல்லை.

திரு. கே. விநயகம் : சார், சரியோ, தப்போ, நம் பேருந்து வண்டி களை எல்லாம் நடத்துவது என்று அரசாங்கம் ஏற்றுக்கொண்டுவிட்டது. அந்த நேரத்தில், அரசாங்கத்தைவிடத் தனிப்பட்டவர்களுக்கே அதிகமாக அனுபவம் இருக்கிறது, நல்ல முறையில் லாபமும் சம்பாதிக்கமுடியும், அதே நேரத்தில் பொதுமக்களுக்கும் நல்ல பணி செய்யமுடியும், இந்தத் துறையில் என்று கருதப்படுகிறது. நான் பேசிய பேச்சுக்குப் பிறகுதான் அமைச்சரவர்கள் எங்கோ ஒரு இடத்தில் ப்ரெஸ் ஸ்டேட்மெண்ட் விட்டார் கள். தனியார் முதலாளிகளை வைத்து அவர்கள் அனுபவத்தைப் பெற்று அவர்கள் யோசனையையும் கேட்டு நம்முடைய சர்க்கார் பஸ்களை நல்ல முறையில் ஒழுங்காக நடத்துவதற்கு வேண்டிய ஏற்பாடுகளைச் செய்யலாம் என்று அமைச்சரவர்கள் சொன்னதாகப் பத்திரிகையில் நான் பார்த்தேன். அது உண்மையா? அப்படி இருந்தால் அதற்கு வேண்டிய நடவடிக்கை எடுக்க ஒரு போர்ட் ஆஃப் ப்ரைவேட் ஆபரேடர்ஸ் போடுவதில் என்ன தப்பு இருக்கமுடியும்? அது நமக்குத்தானே லாபம், அதனால் நாம் என்ன குறைந்தா போவோம்? நம்மைவிட அவர்கள் பெருத்த அனுபவ சாலிகள் என்று அவர்களுக்குப் பெயர் போகுமா என்பதுபற்றி விளக்க வேண்டுகிறேன்.

மாண்புமிகு திரு. மு. கருணாநிதி : இந்தச் சொற்பொழிவுக்கு ஒரே ஒரு பதில்தான் தனியார்துறை முதலாளிகள் அனைவரையும்கொண்ட ஒரு தனிப்பட்ட குழு அல்லது தனியார் துறையில் இருக்கிற அதிபர்களை நாம் அமைக்கிற பல்வேறு குழுக்களில் இடம் பெறச் செய்வது என்ற அடிப் படையில் ஒன்றிரண்டு குழுக்கள் அமைக்கப்பட்டு இருக்கின்றன.